# மிகப்பெரிய தியாகம் | Biggest Sacrifice | Tamil Bedtime Story

ஒரு தூரத்து தேசத்தில் மகாராஜா ஒருத்தர் வாழ்ந்து வந்தார். அவர் ஏழை மக்களுக்கு எப்பவுமே உதவி செய்துகொண்டே இருப்பார். **அவர் ரொம்பவே இரக்க குணம் உள்ளவர். தானம், தர்மம் பண்ணுவதில் ரொம்பவே பெரிய மனசுக்காரர்.**

அவருடைய ராஜ்யத்தில் ஏழை விவசாயி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருடைய மகளுக்கும் திருமண வயது எட்டியது. ஆனால், அவளுக்கு திருமணம் செய்து வைக்கும் அளவுக்கு விவசாயிடம் பணம் இல்லை.

அப்போ அவர் தன்னுடைய மகளிடம் சொன்னார், **"நான் மகாராஜாவிடம் சென்று அவரிடம் உன் திருமணத்திற்கு உதவி கேட்கப் போகிறேன்"** என்றார். அடுத்தநாள் மகாராஜாவை சந்திப்பதற்காக அந்த ஏழை விவசாயி கிளம்பினார்.

மகாராஜாவை சந்திக்க செல்லும் வழியில் அவர் மிகவும் களைப்படைந்தார். மிகவும் பசியாக இருந்தது எனவே ஒரு மரத்தடியில் உட்கார்ந்தார். **அங்கே அவர் பையில் வைத்திருந்த சப்பாத்தியை எடுத்து சாப்பிட உட்கார்ந்திருந்தபோது ஒரு நாய்க்குட்டி மிகவும் பசியாக இருந்தது அது இவர் முன்வந்து வாலாட்டி கொண்டே இருந்தது.**

இரக்க குணமுடைய அவர் அந்த சப்பாத்தியை அந்த நாய்க்குட்டிக்கு சாப்பிட கொடுத்து விட்டார். மீண்டும் தன் பயணத்தை தொடங்கினார். மகாராஜாவின் அரண்மனையை எட்டினார். அவர் மகாராஜாவிடம் சென்று, **"வணக்கம் மகாராஜா நான் மிகவும் ஏழை விவசாயி என்னுடைய மகளின் திருமணத்துக்காக என்னிடம் எந்த பணமும் இல்லை எனவே எனக்கு தாங்கள் தான் உதவி செய்ய வேண்டும்"** என்று வேண்டினார்.

உடனே மகாராஜா, **"சரி நான் உனக்கு உதவி செய்கிறேன். ஆனால், நீ உன் வாழ்நாளில் மற்றவர்க்கு செய்த**

**உதவிகளை பற்றி என்னிடம் கூறு"** என்று கேட்டார்.

அதற்கு அவர் சொன்னார், **"நானோ ஏழை விவசாயி நான் எப்படி மற்றவர்களுக்கு உதவ முடியும்".** அப்போது திடீரென்று அவர் ஒரு நாய்க்குட்டி உணவளித்து ஞாபகம் வந்தது. மகாராஜாவிடம் **"நான் வரும் வழியில் ஒரு நாய்க்குட்டி பசியாக இருந்தது, நான் வைத்திருந்த உணவை அதற்கு கொடுத்தேன்"** என்று கூறினார்.

மகாராஜா அந்த விவசாயின் செயலைப் பாராட்டி, **"மிகவும் நல்லது, நீ பசியாக இருந்தபோதும் அந்த நாய்க்குட்டிக்கு உணவளித்துள்ளாய். இது மிகவும் பெரிய செயல்"** என்று கூறி அந்த விவசாயின் மகளின் திருமணத்தை அவரே நடத்தி வைத்தார்.

நீதி : **நன்மை செய்பவர்களுக்கு கண்டிப்பாக நன்மையே நடக்கும்**.

---

மேலும், இதை போன்ற கதைகளை வாசிப்பதற்கு கீழே இருக்கும் link-ஐ click செய்யவும்...

https://www.tamilkathaigal.com/

---

ஆங்கில கதைகளை வாசிப்பதற்கு கீழே இருக்கும் link-ஐ click செய்யவும்...

https://www.shortstoryenglish.com/